முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 யூலை

## (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2024-08-11
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

# பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** முகாமைத்துவச் செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகளைக் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) திட்டமிடல், தீர்மானமெடுத்தல், தொடர்பாடல் மற்றும் ஊக்கப்படுத்தல்.

(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தீர்மானமெடுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்.

(3) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

(4) திட்டமிடல், ஊக்கப்படுத்தல், வினைத்திறன் மற்றும் கட்டுப்படுத்தல்.

**1.2** நிறுவனமொன்றிற்கு முகாமைத்துவத்திற்கான தேவை தொடர்பில் கீழ்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) ஊழியர்கள் நீண்ட நேரம் வேலை செய்வதை உறுதிசெய்தல்.

(2) நிறுவன இலக்குகளை வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் அடைந்து கொள்ளல்.

(3) ஒரு நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு பணியையும் முகாமை செய்தல்.

(4) ஊழியர்களின் தன்னியக்கத்தைக் (autonomy) குறைத்தல்.

**1.3** பின்வருவனவற்றில், ''மாற்றத்தின் உள்ளக சக்தி'' க்கான உதாரணமாக அமைவது எது?

(1) பணிச் சூழல் நிலைமைகள். (2) போட்டியாளர்களிடமிருந்தான செல்வாக்கு.

(3) வழங்குநர்களிடமிருந்தான செல்வாக்கு. (4) மேற்கூறிய யாவும்.

**1.4** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** தீர்மானமெடுத்தல் என்பது முகாமைத்துவத்திலுள்ள ஒரு தொடர்ச்சியான செயன்முறை ஆகும்.

**(b)** தீர்மானமெடுத்தல், முகாமைத்துவச் செயன்முறை முழுவதையும் எளிதாக்க உதவுகிறது.

**(c)** திட்டமிடலுக்கும் தீர்மானமெடுத்தலுக்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை.

**(d)** படிநிலை மட்டங்களிலுள்ள அனைத்து முகாமையாளர்களுக்கும் தீர்மானமெடுப்பது அவசியமானதாகும்.

மேலுள்ளவற்றுள், தீர்மானமெடுத்தல் தொடர்பில் சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய கூற்றுக்கள் யாவும்.

**1.5** திட்டமிடல் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** இது உணர்வுகளைவிட காரணங்களை அடிப்படையாகக் கொண்டது.

**(b)** இது நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்களை அமைப்பதில் உதவுகிறது.

**(c)** இது குழப்பத்தையும் நிச்சயமற்றதன்மையையும் அதிகரிக்கிறது.

**(d)** இது பெரியளவு நிறுவனங்களுக்கு மாத்திரமே பொருத்தமானது.

மேலுள்ளவற்றுள், திட்டமிடல் தொடர்பில் சரியான கூற்றுக்களாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(d)** யும் மாத்திரம். (4) **(a)** யும் **(b)** யும் **(d)** யும் மாத்திரம்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** பயனுறுதிமிக்க முகாமைத்துவத் திறன்கள் தொழினுட்ப, தனிமனித மற்றும்……………… *(எண்ணக்கருசார்ந்த / கலைநயமான)* திறன்களின் ஒரு கலவையைக் கொண்டுள்ளது.

**1.7** முகாமைத்துவத்தில் தீர்மானமெடுத்தல் என்பது மாற்றுவழிகளை உருவாக்குதல், அவற்றை மதிப்பீடு செய்தல், சிறந்த மாற்றுவழியைத் தெரிவு செய்தல் மற்றும் சிறந்த மாற்றுவழியை ………………….. *(நடைமுறைப்படுத்தல் / ஒதுக்கீடு செய்தல்)* ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

**1.8** தலைவர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஆகிய இருவரும் முக்கிய வகிபாகங்களை ஆற்றுகின்ற அதே வேளை, தலைவரால் ………………….. *(தூரநோக்கு / செயற்பணி)* இன் மீது கவனம் செலுத்தப்படுவது ஒரு பிரதான வேறுபாடாக இருக்கிறது.

**1.9** ஒரு நவீன வணிக நிறுவனத்திலுள்ள தொடர்பாடல் ஆனது கூட்டுச் செயற்பாடு, அணி வேலையை வளர்ப்பது மற்றும் சகல மட்டங்களிலும் ...................... *(தெளிவின்மையை / தெளிவினை)* உறுதி செய்வது ஆகியவற்றுக்கான அடித்தளமொன்றாகப் பணியாற்றுகிறது.

**1.10** பீற்றர் டக்கர் இன் கூற்றிற்கிணங்க, சரியானதைச் செய்வது ...................... *(பயனுறுதித்தன்மை / வினைத்திறன்)* ஆகும். (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** சமகால வணிகச் சூழலில் முகாமையாளர்கள் சந்திக்கின்ற இரண்டு (02) பிரதான சவால்களைக் குறிப்பிடுக.

**1.12** உற்பத்தித்திறன் என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக..

**1.13** அடிப்படைச் சந்தைக் கலவையை (4Ps) இனங்காண்க.

**1.14** மாற்ற முகாமைத்துவம் (change management) என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.15** ஊழியர்கள், மாற்றத்தை எதிர்ப்பதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

சுறுசுறுப்பாக இயங்கும் சில்லறை விற்பனை நிறுவனத்தில் தீர்மானமெடுப்பதில் தகவல்களின் வகிபாகம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இதில் தேவையை எதிர்வுகூறுதல், விளம்பரப்படுத்தலைத் திட்டமிடுதல், இருப்புகளை உகந்ததாக்கல் போன்றவை அடங்குகின்றன. பிரிவுகள் தடையின்றி ஒத்துழைப்பதால் நிறுவனக் கட்டமைப்பின் முக்கியத்துவம் தெளிவாகின்றது. ஒன்றாகச் சேர்ந்து தகவல் சார்ந்து தீர்மானமெடுப்பது, துல்லியமாகத் திட்டமிடுவது மற்றும் வலுவான நிறுவனக் கட்டமைப்பு என்பன மாறிக்கொண்டிருக்கும் சந்தையில், சில்லறை விற்பனை நிறுவனத்தை வெற்றியை நோக்கித் தள்ளு கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) திட்டமிடல் என்பதால் கருதப்படுவது யாதெனக் **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) தீர்மானமெடுப்பதில் தகவல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) பிரிவுக் கட்டமைப்பின் இரண்டு (02) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

வங்கியியல் கம்பனியொன்றில், அதிகாரம் முகாமைத்துவ வகிபாகங்களில் காணப்படுவதுடன் தனிநபர் களுக்கு தீர்மானங்களை எடுப்பதற்கும் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கும் உரிமை அளிக்கப்படுகிறது. தொழிற்றுறைகள் புதிய தொழினுட்பங்களை ஒருங்கிணைப்பதால், நிதி வல்லுநர்கள் வளர்ந்துவரும் தளத்தில் செல்லக்கூடிய ஆற்றல்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு அதிநவீன நிதித் தொழினுட்ப முறைமையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதில் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் முக்கியமானதாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) அதிகாரம் (authority) மற்றும் வலு (power) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) புதிய தொழினுட்பத்துடன் நிதி முகாமையாளர்களுக்குத் தேவையான இரண்டு (02) ஆற்றல்களை (competencies) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(c) அதிநவீன நிதித் தொழினுட்ப முறைமையை நடைமுறைப்படுத்துவதில் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் செயன்முறையொன்றைக் கொண்டிருப்பதன் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் என்பது தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் ஒரு பிரதான தொழிற்பாடாகும். மேலும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கிடையே தடையற்ற ஒருங்கிணைப்பை கம்பனி அடையக்கூடியதாக இருப்பதால், வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் தெளிவாகிறது. வழங்கல் சங்கிலியை சரியான முறையில் முகாமை செய்வதற்காக, ஒரு வணிகம் வழங்கல் சங்கிலிச் செயற்பாடுகளில் பல்வேறு தந்திரோபாயங்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் தவிர்ந்த, தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் வேறு இரண்டு (02) தொழிற்பாடுகளை (functions) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) பொருள்கள் மற்றும் சேவைகளுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

தற்போதைய சூழ்நிலையில் பணியாளர் பன்முகத்தன்மையானது நிறுவன முகாமையாளர்களுக்கு மிகப்பெரிய சவாலாக மாறிவருகிறது. நிறுவனத்தின் பொதுவான இலக்குகளை நோக்கி பலதரப்பட்ட ஊழியர்களையும் வழிப்படுத்துகின்ற அதே வேளை அவர்களின் உகந்த பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது வணிக நிறுவனங்களில் உள்ள ஒவ்வொரு முகாமையாளரினதும் மையப் புள்ளியாக மாறிவருகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ஒரு நிறுவனத்திற்கு மனித வள முகாமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒரு நிறுவனத்திற்கு நிறுவன நடத்தையின் நான்கு (04) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

போட்டிமிக்க தானியங்கி மோட்டார் வாகனத் துறையில் உள்ள ஒரு கம்பனி சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வுள்ள நுகர்வோரை இலக்காகக் கொண்டு, அதிநவீன தொழினுட்பத்துடன்கூடிய ஒரு புரட்சிகர மின்சார வாகனத்தை அறிமுகப்படுத்துகின்ற ஒரு வித்தியாசமான தந்திரோபாயத்தைக் கையாளுகிறது. சமூக ஊடகத் தளங்கள் மற்றும் தேடல் பொறிகள் மீதான தந்திரோபாய டிஜிடல் சந்தைப்படுத்தல் பிரசாரங்கள் ஊடாக, கம்பனியானது சந்தையில் ஒரு தனித்துவமான நிலையை உருவாக்கி, புதுமை மற்றும் நீடித்த தன்மையை விரும்பும் முக்கிய பார்வையாளர்களை ஈர்க்கின்ற விதத்தில் காரின் மேம்பட்ட அம்சங்கள், சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் சிறந்த செயற்றிறன் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) துண்டப்படுத்தல் (segmentation) மற்றும் நிலைப்படுத்தல் (positioning) ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) வணிகமொன்றிற்கான டிஜிடல் சந்தைப்படுத்தலின் இரண்டு (02) அனுகூலங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) வேறுபடுத்தல் தந்திரோபாயம் (differentiation strategy) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**XYZ நாட்டின்** தேசிய விமானசேவை நிறுவனமான **பீக்கொக் எயார்லைன்ஸ்,** சமீபத்திய ஆண்டுகளில் நிதிக் கொந்தளிப்பு நிலை, செயற்பாட்டு வினைத்திறனின்மை மற்றும் உலகளாவிய விமானப் போக்குவரத்துத் துறையில் அதிகரித்துள்ள போட்டித்தன்மை உள்ளிட்ட கணிசமானளவு சவால்களை எதிர்கொண்டது. விமானசேவை நிறுவனத்தின் எதிர்காலப் பாதையை மறுவடிவமைப்புச் செய்வதில் தந்திரோபாய முகாமைத்துவம் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகிறது. உள்ளக மற்றும் வெளிப்புறச் சூழலின் முழுமையான பகுப்பாய்வு, விரிவான தந்திரோபாயத் திட்டத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. நிறுவனமானது தெளிவான நோக்கங்களை அமைத்து, பிரதான செயற்றிறன் குறிகாட்டிகளை இனங்கண்டதுடன் வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையையும் நடைமுறைப்படுத்தியது.

நெருக்கடியானதொரு கட்டத்தில், விமானசேவை நிறுவனம், தலைமை மாற்றத்திற்கு உள்ளாகியது. உள் வந்த பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO), நிதிச் செயற்றிறனின் சரிவை எதிர்கொண்டு, ஒரு மாற்றத்திற்கான பயணத்தைத் தொடங்கினார். நெறிமுறைசார்ந்த தலைமைத்துவம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான வலியுறுத்தலானது நம்பிக்கையை மீண்டும் பெறுவதிலும் பணியாளர்களை பொதுவான இலக்கை நோக்கி அணிதிரட்டுவதிலும் முக்கிய வகிபாகத்தை ஆற்றியது. மனித வள முகாமைத்துவம் **பீக்கொக் எயார்லைன்ஸ்** இல் முக்கிய வகிபாகத்தை ஆற்றியது. ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் புதுமைகளைப் (innovations) படைப்பதற்குமென பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன.

அதிகரித்த போட்டியை எதிர்கொள்ள, **பீக்கொக் எயார்லைன்ஸ்** அதன் சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்தை மீள் – வரையறை செய்ய வேண்டியிருந்தது. சந்தைப்படுத்தல் அணியானது வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையை ஏற்றுக்கொண்டதுடன் பயணிகளின் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் புரிந்துகொள்ள, சந்தை ஆய்வினை மேம்படுத்துகிறது. உயர் மதிப்புமிக்க மற்றும் நம்பகமான நிறுவனமாக விமானசேவை நிறுவனத்தை நிலைநிறுத்த, வணிகக் குறியிடல் (branding) முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. விமான சேவை நிறுவனம் மக்களைச் சென்றடைவதை (reach) விரிவுபடுத்த, உலகளாவிய விமானசேவை நிறுவனங்களுடன் தந்திரோபாயப் பங்குடமைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட டிஜிடல் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. சந்தைப்படுத்தல் முகாமைத்துவ அணி விமான நிறுவனத்தின் பிம்பத்தை வெற்றிகரமாக மீள்வரையறை செய்ததுடன், பல்வேறு வாடிக்கையாளர் தளங்களையும் ஈர்த்து, சந்தைப் பங்கினை அதிகரித்தது. **பீக்கொக் எயார்லைன்ஸ்** இல் தொடர்பாடல் பிரதானமாக இருந்ததுடன் ஊழியர்கள், தகவல்களை அறிந்து வைத்திப்பதையும் ஈடுபாட்டுடன் இருப்பதையும் பேணுவதற்காக நிறுவனமானது, வழக்கமான கூட்டங்கள், வேலைப் பட்டறைகள், பயிற்சிச் செயலமர்வுகளை முன்னெடுத்திருந்தது. மாற்ற முகாமைத்துவத் (change management) தந்திரோபாயமானது, தழுவிக்கொள்ளத்தக்க (adaptability) மற்றும் நெகிழ்திறமான (resilience) கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் கவனஞ் செலுத்துவதுடன், விமானசேவைத் துறையில் வளர்ந்துவரும் களத்திற்காக ஊழியர்களையும் தயார்செய்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **பீக்கொக் எயார்லைன்ஸ்** இற்கு பயனுறுதிமிக்க தலைமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) புதுப்பிக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் புதுமைகளைப் படைப்பதற்கும் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதற்கான மூன்று (03) வழிகளை (ways) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) பல்வேறு வாடிக்கையாளர் தளங்களையும் ஈர்ப்பதற்கு அதன் வர்த்தக் குறியீட்டின் மீள்நிலைப்படுத் தலைப் பயன்படுத்துவதால் **பீக்கொக் எயார்லைன்ஸ்** இற்குக் கிடைக்கும் மூன்று (03) நன்மைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(d) **பீக்கொக் எயார்லைன்ஸ்** இன் தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறைக்கு, சூழல் பகுப்பாய்வு ஏன் முக்கியமானது என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) **பீக்கொக் எயார்லைன்ஸ்** இன் வெவ்வேறு முகாமைத்துவ மட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று (03) பிரதான தந்திரோபாயங்களை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |